2010 ஏப்ரல் 7]
30—

தரம் உயர்த்துதல்

***102931—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டு கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டு கிராமம் மற்றும் கிராவிடிநத்தம் ஊராட்சி, உடையூர் ஊராட்சி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் புவனகிரிக்கு 3 கி.மீ. தொலைவும், இல்லையென்றால் மஞ்சக்கொல்லை ஊராட்சிக்கு 4 கி.மீ. தொலைவும் செல்லவேண்டுமென்ற காரணத்தால் இப்பகுதியில் வசிக்கும் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் நலன் கருதி வண்டுராயன்பட்டு ஆதி திராவிட நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 7

முற்பகல் 10—35

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, அப்பகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, ஏற்கெனவே அப்பகுதியிலுள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை, தொலைவு ஆகியவற்றைக் கருத்திலேகொண்டு நிதிநிலைக்கேற்ப ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் படிப்படியாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில், 10 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 32 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 13 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், கடலூர் மாவட்டத்தில் மட்டும் 2006—2007 ஆம் ஆண்டில் சேப்பாக்கம் அரசு ஆதி திராவிடர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும், 2008—2009 ஆம் ஆண்டில் சிறுமங்கலம் அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. புவனகிரி தொகுதி அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டு கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளி, மாணவர்களுடைய எண்ணிக்கை மற்றும் நிதிநிலைமைக்கேற்ப, தேவைப்படின் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் முழுவதும் ஆதி திராவிட சமுதாய மக்களாகவே உள்ளார்கள். அந்தப் பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிக்குப் படிக்கப் போகவேண்டுமென்றால் மிகத் தொலைவு செல்ல வேண்டியுள்ள காரணத்தால், அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டு ஊராட்சி, வத்திராயன்தத்து ஊராட்சி, மஞ்சக்கொல்லை ஊராட்சி—மஞ்சக்கொல்லைக்குப் போகவேண்டுமென்றால், 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் ஆகும். அதனால், இந்தப் பிள்ளைகளினுடைய நலன் கருதி அவசியம் அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும். தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தளவாடி ஊராட்சி, நந்தங்கோட்டையில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, இப்பள்ளியைத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து முன்மொழிவுகளும் அரசுக்கு அனுப்பப்பட்டு, கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற திட்டத்தின்கீழ் மாநிலம் முழுமையும் எத்தனை ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும், என்னுடைய குடியாத்தம் தொகுதியில் ஆர். வெங்கட்டாபுரம் பள்ளியைத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2010 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடைநிலைக் கல்வி மூலமாக பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டிருக்கின்றார்கள். இது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பெருமாள்பட்டு ஊராட்சி, ஜடையனூர் காலனியிலே இருக்கின்ற ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கடந்த 4 ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்தேன். கடந்த ஆண்டுகூட மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டேன். இந்த ஆண்டு பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆதி திராவிட மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூடுதலான இடங்களையும், நிதியினையும் ஒதுக்கி நிலுவையிலிருக்கின்ற இப்படிப்பட்ட நடுநிலைப் பள்ளிகளையெல்லாம் தரம் உயர்த்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மொத்தம் 12 பள்ளிகள்தான் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்று

2010 ஏப்ரல் 7]

இதுவரைக்கும் 32 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் என்றைக்குமே ஆதி திராவிட மாணவர்களினுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளித்துச் செயல்படுத்தக்கூடியவர்கள். அதனால், இந்த ஆண்டு நிதி வரப்பெற்றவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) திரு சி. ஞானசேகரன், ஒரு நிமிடம் உட்காருங்கள்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 109—ன்கீழ் தன்னிலை விளக்கம்

5-4-2010 அன்று பேரவையில் அளித்த விடை தொடர்பாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் தன்னிலை விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—40

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் கடந்த 5 ஆம் தேதி வினா—விடை நேரத்தில் கும்மிடிப்பூண்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு நான் அளித்த விடையை அவர் ஏற்க மறுத்து இந்தச் சபையில் உண்மைக்குப் புறம்பான பல தகவல்களைச் சொல்லி இருக்கின்றார்கள். அது இந்தத் துறையினுடைய பொறுப்பு வகிக்கக்கூடிய எனக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே இருக்கின்ற காரணத்தால் நான் ஒரு சில விளக்கத்தை இங்கே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.